# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு - 1 (Year 1)

1/09/2018 - 31/08/2019 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/11/2024

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## தமிழின் இனிமை

தமிழே! தமிழே என் தங்கத்தமிழே!
தமிழே! தமிழே என் தாய்மொழியாம் தமிழே!
சுவையே சுவையே உன் சொல் வளம் சுவையே
அமுதே அமுதே உன் மறுபெயர் அமுதே

தரணியில் தோன்றிய பழைமை மொழி நீ
தங்கத்தைப் போல் குணம் குன்றாத மொழி நீ
முத்தமிழைத் தன்னகத்தே கொண்ட மொழி நீ
முன்னோர்களால் மெருகூட்டப்பட்ட மூத்த மொழி நீ

இலக்கணம் கொண்ட இனிய மொழி நீ
இளமையாக என்றும் வாழும் மொழி நீ
சங்கம் வளர்த்தெடுத்த செந்தமிழ் நீ
காலத்தால் அழியாத செம்மொழி நீ